# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஆகஸ்டு 30, 2025

Weekly E-paper • August 30, 2025



## கோயில் தலமனைத்தும் பள்ளிகள் செய்வோம்!

சுப.வீரபாண்டியன்

## தமிழ்நாடு வன்முறைக் களமல்ல!

காசு. நாகராசன்

## சூடாகிறது பீகார்!

தலையங்கம்

## மறுமலர்ச்சிக் கவிஞர் புதுவைச் சிவம்

முனைவர் சிவ. இளங்கோ

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - ஆகஸ்டு 30, 2025

Weekly E-paper ● August 30, 2025


# கோயில் தலமனைத்தும் பள்ளிகள் செய்வோம்!

சுப.வீரபாண்டியன்

*"பள்ளித் தலம் அனைத்தும் கோயில்கள் செய்குவோம்" என்று பாரதி பாடி இருக்க, அதை அப்படியே மாற்றி, கோயில் நிலமனைத்தும் பள்ளிகள் செய்வோம் என்று புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறது, நம் திராவிட மாடல் அரசு!*

*ஆம், கொளத்தூர் கபாலீஸ்வரர் கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் புதிய கட்டிடம் கட்டுவதற்காக, கொளத்தூர் சோமநாத சாமி கோயில் நிலத்தினை 25 ஆண்டுகளுக்கு, கபாலீஸ்வரர் கோயிலுக்கு குத்தகைக்கு விட்டு, அதில் வரும் பணத்தில் கபாலீஸ்வரர் கல்வி நிலையத்தில் கட்டிடம் கட்டுவதற்குத் தமிழ்நாடு அரசின் அறநிலையத்துறை முடிவு செய்தது !*



*ஆனால் அவ்வாறு கோயில் பணத்திலிருந்து, கல்லூரியில் கட்டிடம் கட்டக் கூடாது என்று பி.ஆர். ரமேஷ் என்பவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.*

*அதனை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மீண்டும் அவர் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அந்த வழக்கும் தள்ளுபடி ஆனது!*

*ஆனால் ரமேஷ் விடவில்லை. காரணம், அவர் ஒரு தனி மனிதர் இல்லை! அவருக்குப் பின்னால் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் நன்றாகவே தெரியும்!*

*கடந்த ஆண்டிலிருந்து இந்த வழக்கு பல்வேறு நீதிமன்றங்களைச் சந்தித்தது. இறுதியாக, ரமேஷ் உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்தார்!*

*அந்த வழக்கில் இப்போது தீர்ப்பு வந்துள்ளது. கோயில் பணத்தை மக்களுக்காக - அதிலும்மக்களின்கல்விக்காகத் தானே செலவழிக்கிறார்கள். இதில் என்ன தவறு இருக்கிறது? அல்லது இதில் உங்களுக்கு என்ன சிக்கல் இருக்கிறது என்று நீதிமன்றம் கேட்டிருக்கிறது!*

*அந்த வழக்கைத் தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்றம், கோயில் நிதியில் கல்லூரியில் கட்டிடம் கட்ட அனுமதியும் வழங்கி உள்ளது! வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ள எல்லா நீதிமன்ற நீதிபதிகளுக்கும், நம் வணக்கங்களையும், பாராட்டுகளையும் பதிவு செய்ய வேண்டும்!*

*கோயில்களுக்கு ஆதரவானவர்கள் போலத் தங்களைக் காட்டிக் கொள்ளும் இவர்கள், உண்மையில் மக்களுக்கு எதிரானவர்கள் ! கல்வியும் அறிவும் மக்களுக்குக் கிடைத்து விடக் கூடாது என்று எண்ணும் மதவாதிகள்! இவர்களை நீதிமன்றம் புறக்கணித்துள்ளது. மக்களும் புறக்கணிக்க வேண்டும்!*

●

# தமிழ்நாடு வன்முறைக் களமல்ல!

காசு. நாகராசன்




அதிமுக சார்பில் தேர்தல் பரப்புரையைத் தொடங்கி இருக்கிறார் திருவாளர் எடப்பாடி பழனிசாமி. கூடவே, வெளிப்படையான கும்பல் வன்முறையைத் தூண்டி விட்டு, தான் கூட்டுச் சேர்ந்திருக்கும் பாஜகவின் வடநாட்டு அரசியல் பாணியைத் தமிழ்நாடு அரசியல் களத்தில் தொடக்கி இருக்கிறது அதிமுக. இது ஓர் ஆபத்தான போக்காகும். அதாவது திருவாளர் பழனிசாமியின் அநாகரிகமான வன்முறையைத் தூண்டும் வகையில் பேசும் பேச்சை நாடுமுழுவதும்அனைத்துத்தரப்பினரும்வன்மையாகக் கண்டித்திருக்க வேண்டும். அரசும் உடனடியாக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவுமே நடைபெறவில்லை. மாறாக சமூக ஊடகங்களில் எதிரெதிர் கருத்துகளைப் பதிவிட்டதோடு அனைத்துத் தரப்பினரும் இந்தப் பிரச்சனையின் பின்விளைவுகளைப் பற்றிய கவலை இல்லாமல் ஏறக்குறைய கடந்து போய்விட்டனர். இதன் விளைவாக, அடுத்த ஒருசில நாட்களிலேயே பழனிசாமியின் தூண்டுதலால், வன்முறை மனோபாவத்தை திருச்சி துறையூரில் செயல்படுத்தியிருக்கிறார்கள் அதிமுக தொண்டர்கள்.

எடப்பாடி பழனிசாமி பேச இருந்த பகுதி வழியாக வந்த ஆம்புலன்ஸ் வண்டியை மறித்து வாகனத்தையும், வாகனத்தின் உள்ளே இருந்த ஓட்டுநர் மற்றும் மருத்துவப் பணிப்பெண்ணையும், சரமாரியாகத் தாக்கி வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்ட காட்சி உண்மையில் கவலையை, அச்சத்தை ஏற்படுத்துகிறது.

அதிமுகவினருக்கு இதுபோன்ற வன்முறை ஒன்றும் புதிதல்ல. 1991 - 96 ஆட்சிக்காலத்தில் வரலாறு காணாத ஊழலையும், வெளிப்படையான கொள்ளை, அதிகார அத்துமீறலிலும் ஈடுபட்டது ஜெயலலிதா தலைமையிலான ஆட்சி. மக்களின் பெரும் வெறுப்புக்கு ஆளான ஜெயலலிதா 1996 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்டார்.

ஜெயலலிதா மற்றும் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் பலர் மீதும் ஊழல் வழக்குகள் பதியப்பட்டன. அதில் ஒன்று தான் கொடைக்கானல் ப்ளஷன்ட் ஸ்டே ஹோட்டல் வழக்கு. இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட ஜெயலலிதாவுக்கு ஓராண்டு சிறை தண்டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்பளித்தது.

எப்போதும் சட்டத்தை ஒரு பொருட்டாகவே மதிக்காத அதிமுக தொண்டர்கள் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் சாலைகளில் திரண்டு வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்டனர். அரசுப் பேருந்துகள் தாக்கப்பட்டன. மக்களின் இயல்பு வாழ்க்கையும் , அமைதியும், சட்டம் - ஒழுங்கும் சீரழிக்கப்பட்டன. அதிமுகவினரின் இந்த வன்முறையில் 50 க்கும் மேற்பட்ட பேருந்துகள் தாக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான பொதுமக்கள் காயமடைந்தனர்.

2000 ஆம் ஆண்டு பிப்ரவரி 02 ஆம் நாள் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் பயணம் செய்த மூன்று கல்லூரிப் பேருந்துகளும் தருமபுரி புறநகர் பகுதியில் தடுத்து நிறுத்தித் தாக்கப்பட்டன. அதில் ஒரு பேருந்து தீ வைத்தே எரிக்கப்பட்டது. எரிக்கப்பட்ட பேருந்தில் சிக்கிக்கொண்ட மாணவர்களின் மரண ஓலம் அந்தப் பகுதியையே அதிரச்செய்தது. சக மாணவர்களும் பேராசிரியர்களும் போராடி அனைவரையும் மீட்டனர். ஆனால், ஹேமலதா, கோகிலவாணி, காயத்ரி என்கிற மூன்று மாணவிகளை உயிரோடு காப்பாற்ற முடியவில்லை. எரிந்த கரிக்கட்டைகளாக, உயிரற்ற உடல்களாகவே அந்தப் பிள்ளைகள் மீட்கப்பட்டனர்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## சூடாகிறது பீகார்!

"கடந்த ஒரு மாத காலமாக, இந்தியாவே பிகாரைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறது. இதுதான் பிகார் மக்களின் பலம்! ராகுல் காந்தியின் பலம்! தேஜஸ்வியின் பலம்!" பீகாரில் 27-08-2025 அன்று தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் இரண்டு வரிகள் இவை.

பாஜக ஆட்சி இன்னும் 50 ஆண்டுகள் நடக்கும் என்று அமித்ஷா பேசி இருந்தார். தேர்தல் முறை கொண்ட ஒரு ஜனநாயக நாட்டில் இது எப்படி சாத்தியம் ஆகும்?

ஆகும் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டார் மக்களவை எதிர்கட்சித் தலைவர். ராகுல்காந்தி பீகாரில். அதற்குப் பெயர் 'வாக்குத் திருட்டு'. பாஜகவுக்காகத் தேர்தல் ஆணையமே செய்திருக்கும் திருட்டுத்தனம் இது.

பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் திடீரென்று காணாமல் போய்விட்டார்கள். புதிதாக எங்கிருந்தோ பலர் முளைத்து விட்டார்கள். அதுபற்றி ராகுல் காந்தியில் நியாயமான கேள்விகளுக்குத் தேர்தல் ஆணையம் நேர்மையுடன் விளக்கம் தராமல், 'நீ பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்' என்று பிதற்றிக் கொண்டு இருக்கிறது.

திருடன் மாட்டிக் கொண்டால் திருதிருவென முழிப்பான் என்று சொல்வார்கள். அப்படித்தான் முழித்துக்கொண்டு இருக்கிறது தேர்தல் ஆணையம். சரி, பிரதமர், உள்துறை அமைச்சர்களாவது இது குறித்துப் பேசுகிறார்களா என்றால், அவர்கள் முக்காடு போட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

திருடப்பட்ட இடத்தில்தானே தேடவேண்டும்.

ராகுல்காந்தி தலைமையில் பீகாரிலேயே இந்தியா கூட்டணித் தலைவர்கள் மக்களிடம் போய்விட்டார்கள்.

எதிர்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரியங்கா காந்தி, கனிமொழி, பீகார் எதிர்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸாடலின் ஆகியோர் கலந்துகொண்ட பேரணிக்குப் பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் நம் முதல்வர் பேசிய இரண்டு வரிகள் இதன் தொடக்கத்தில் பார்த்தோம்.

இது பீகாரின் பலம் அல்ல, இந்திய ஒன்றியத்தின் பலம், ஆட்சி மாற்றத்திற்கான பலம். அங்கே ஓட்டுத் திருடர்களைத் தண்டிப்பதற்கான பலம்.

மக்கள் பலத்திற்கு முன்னால் சர்வாதிகாரம் வீழும் என்று அதே கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் சொன்னது நடக்கும்!

| | |
|---|---|
| ஆசிரியர்: | இணையதளம்: |
| சுப.வீரபாண்டியன் | www.keetru.com, www.karunchattaibooks.com |
| பொறுப்பாசிரியர் | மின் அஞ்சல்: |
| எழில்.இளங்கோவன் | karunchattai@gmail.com |
| உதவி ஆசிரியர்கள்: | டுவிட்டர்: suba_vee |
| வெற்றிச்செல்வன் | தொடர்புக்கு |
| சாரதா தேவி | 120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம் |
| வெளியீடு: | சென்னை- 600 024, |
| திராவிட இயக்கத் தமிழர் பேரவை | தொலைபேசி: 044-2472 6408 |

முன்பக்கத் தொடர்ச்சி...

இப்போதும் பழனிசாமி பொதுக்கூட்டத்தில் வெளிப் படையாகப் பேசுகிறார், அடுத்தமுறை ஆம்புலன்ஸ் வண்டி வந்தால், அதில் நோயாளி இல்லை யென்றால், அதே ஆம்புலன்ஸில் ஓட்டுநரையே நோயாளியாக அனுப்பி வைக்கப் படுவார் என்று. இது எவ்வளவு வன்மையான, நாகரிகமற்ற , அரசியல் முதிர்ச்சி அற்ற பேச்சு.

அடுத்த இரண்டாம் நாள் ஆம்புலன்ஸ் ஓட்டுநரைத் தாக்கி நோயாளியாக அதே ஆம்புலன்ஸ் வண்டியில் அனுப்புகிறது இந்த கும்பல். இதுவாவது கடுமையான நடவடிக்கைக்கு, கண்டனத்திற்கு உட்படுத்தப்பட்டதா? இல்லையே. எந்த ஒரு பொது ஊடகமாவது இந்த வன்முறைப் பேச்சைக் கண்டித்து எழுதியதா? பேசியதா? இல்லையே.

ஆட்சி அதிகாரத்தைப் பெற எந்த எல்லைக்கும் போவதற்குத்துணிந்திருக்கிறது பாஜக எனும் பிரிவினை, வன்முறை, பயங்கரவாத செயல்களையே நம்பியிருக்கிற சக்தியோடு கூட்டுசேர்ந்து தமிழ்நாட்டில் வன்முறை மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றத் துடிக்கிற பதவி வெறிதான் பழனிசாமியின் கண்களில் தெரிகிறது.

வன்முறை, சமூகவிரோத, சட்ட விரோத அதிமுகவின் முகத்திரையைக் கிழித்து மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தி அந்நியப் படுத்தவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு சமூகச் செயற்பாட்டாளருக்கும் இருக்கிறது. காலத்தே அதைச் செய்ய வேண்டும்.


"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்" என்பது திருவள்ளுவரின் எச்சரிக்கை நினைவில் கொள்வோம்!!

# மறுமலர்ச்சிக் கவிஞர் புதுவைச் சிவம்

முனைவர் சிவ. இளங்கோ

இருபதாம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக் காலத்தில், தமிழ்மொழியின் வளர்ச்சி நிலைகளில் கவிஞர் புதுவைச்சிவம் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. கவிதைகள், இசைப் பாடல்கள், நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள்,கடிதங்கள், மொழிபெயர்ப்பு என அவரது படைப்புகள் பல்வேறு இலக்கிய வகைமைகளிலும், வகைகளிலும் வெளிப்பட்டுள்ளன. தன்னுடைய படைப் புருவாக்களின்மூலம்,திராவிடஇயக்கஇலக்கியவரலாற்றில் தனித்துக் குறிப்பிடத்தக்க தடம் பதித்துள்ளார் புதுவைச் சிவம். புதுவைச்சிவத்தின் பன்முகப் பங்களிப்புகளையும், படைப்புலகத்தையும் ஆராய்ந்து மதிப்பிடுவது திராவிட இயக்க வரலாற்றுத் தேவை மட்டுமல்ல. தமிழிலக்கிய மறுமலர்ச்சிக் கால ஆய்வுகளுக்கும் அவசியமான ஒன்று.

கவிஞர் புதுவைச்சிவம் என்று அழைக்கப்படும் ச. சிவப்பிரகாசம் அவர்கள் 1930ஆம் ஆண்டில் தனது 22 ஆவது அகவையில் எழுதத் தொடங்கியுள்ளார். அவருடைய எழுத்துலக நுழைவு கட்டுரை வடிவிலேயே அமைந்தது. அவரது முதல் கட்டுரை புதுவை முரசு இதழில் வெளிவந்தது. பாரதிதாசன், புதுவைச்சிவம், ம. நோயல், அல்போன்ஸ் லகாஷ் ஆகியோரின் கூட்டு முயற்சியில் நடத்தப்பட்ட 'புதுவை முரசு' என்னும் இதழ் இரண்டாண்டுகள் வெளிவந்தது.



கட்டுரைகளில் தொடங்கிய பதுவை சிவத்தின் எழுத்துலகம் மிக விரைவிலேயே படைப்பிலக்கியத்தை நோக்கிப் பயணிக்கத் தொடங்கி விடுகிறது. இந்நாட்களில் பாவேந்தரிடம் தனிப்பட்ட முறையில் யாப்புப் பயின்ற அவர் விரைவில் பாட்டெழுதத் தொடங்கி விடுகிறார். அவர் மனதை ஈர்த்திருந்த பாரதி, பாரதிதாசன் போலவே சிந்துப் பாடல்களைத்தான் அவர் தொடக்க காலத்தில் எளிமையாகப் படைத்திருக்கிறார். அவரது ஐந்து பாடல்கள் கொண்ட தொகுதி "புதுவை நெசவுத் தொழில் ஏழையர் எழுச்சிப் பாடல்" என்ற தலைப்பில் 1932ஆம் ஆண்டிலேயே புதுவை முரசு அச்சகமான கலாநிதி பிரசில் அச்சேற்றப்பட்டுச் சிறு வெளியீடாக வந்துள்ளது. தொடர்ந்து அவரது படைப்புலகப் பயணத்தில் வெள்ளமெனப் பெருக்கெடுத்தக் கவிதைகள் ஒன்பது தொகுதிகளாக வெளிவந்தன.

சீர்திருத்த இயக்கத்தின் பொறுப்பாளராகவும், அவ்வியக்கக் கவிஞராகவும், எழுத்தாளராகவும், விளங்கியவர் புதுவை சிவம். உலக விஷயங்களைத் தமக்கு உணர்த்திவரும் ஆசிரியராகப் பெரியாரையும், தீந்தமிழில் யாப்புப் பயிற்றுவித்த பாரதிதாசனை மற்றொரு ஆசிரியராகவும் புதுவைச்சிவம் குறிப்பிட்டுள்ளார். இவ்வடிப்படையில் பாரதிதாசனைப் போலவே பல நாடகங்கள் இயற்றிய புதுவைச்சிவம், அவை அனைத்தையுமே சுயமரியாதை இயக்கக் கொள்கை விளக்கமாக அமைப்பதில் கவனம் செலுத்தியிருக்கிறார். சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கக் காலக் கட்டத்தில் மக்கள் விரும்பிப் பார்க்கின்ற அளவில் இயக்கக் கொள்கைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் நாடகங்களினூடே இழையோடச் செய்திருக்கிறார்.

புதுவைச் சிவம் மறைந்த பின்னர் 1993ஆம் ஆண்டில் "கவிஞர் புதுவை சிவம் இலக்கியப் பேரவை" என்ற அமைப்பு புதுவைத் தமிழறிஞர்களால் உருவாக்கப்பட்டது. புதுவைச்சிவம் பிறந்தநாள், அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று புதுச்சேரி அரசு அறிவித்து, 1997ஆம் ஆண்டு முதல் கொண்டாடி வருகிறது. புதுவை அரசின் கலைப் பண்பாட்டுத்துறை மூலம் கவிதை நூல்கள் தொகுக்கப்பட்டு 1997 ஆம் ஆண்டிலும், புதுவைச் சிவத்தின் நாடகங்கள் தொகுக்கப்பட்டு 2000ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. 2002ஆம் ஆண்டில் புதுச்சேரி அரசால் புதுவைச் சிவம் முழு உருவச்சிலை புதுச்சேரி, காமராசர் சாலையில் அமைக்கப்பட்டு ஆண்டுதோறும் அவரது நினைவு நாளும், பிறந்த நாளும் புதுவை அரசின் செய்தி விளம்பரத்துறையால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம், புதுவைச்சிவம் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 2003ஆம் ஆண்டுவெளியிட்டது.அதேநிறுவனத்தில் புதுவைச்சிவம் இலக்கியப் பேரவை சார்பில் "புதுவைச் சிவம் அறக்கட்டளை" 2004ஆம் ஆண்டு நிறுவப்பட்டு ஆண்டுதோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்று வருகிறது. கவிஞர் புதுவைச்சிவம் நூற்றாண்டை (2007-2008) புதுச்சேரி, தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு தமிழ் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் கொண்டாடின. புதுவைச்சிவம் படைப்புகளை தமிழக அரசு அவரது நூற்றாண்டில் நாட்டுடைமை ஆக்கியுள்ளது. புதுவை,சென்னைப் பல்கலைக்கழகங்கள் நூற்றாண்டுக் கருத்தரங்கை நடத்தின. நூற்றாண்டை ஒட்டிப் புதுவைச் சிவம் நினைவாக அருங்காட்சியகமும், வளைவுத் தூணும் அமைக்கப்படும் என்று புதுச்சேரி அரசு அறிவித்துள்ளது.